13MS



# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் -15

## சுற்றுச்சூழல்

## அறிவிப்புகள்

## 2012 - 2013

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் -15

சுற்றுச்சூழல்

**அறிவிப்புகள்**
**2012 - 2013**

திரு பி.வி.ரமணா
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 2012–2013ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

### 1. சுற்றுச்சூழல் மன்றங்கள் (ECO CLUBS) அமைத்தல்

தமிழகத்தில் தற்போது 8000 பள்ளிகளில் தேசிய பசுமைப் படையும் (National Green Corps) 1200 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்களும் (Eco Clubs) உள்ளன. 2012–2013 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தில் 1869 பள்ளிகளில் இது போன்ற மன்றங்கள் அமைக்க ரூ.46.73 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து ஆய்வு செய்யும்போது அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் படிப்படியாக அமைக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அதற்கேற்ப 2012–2013ஆம் ஆண்டு மாவட்டம் ஒன்றுக்கு 100 பள்ளிகள் வீதம் 3200 பள்ளிகளில் ரூ.80 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் மன்றங்கள் கூடுதலாக அமைக்கப்படும். ஒவ்வொரு பள்ளிக்கும் உதவித் தொகையாக ரூ.2500 மாநில அரசால் வழங்கப்படும்.

## 2. மாநில சுற்றுச்சூழல் கொள்கை (State Environment Policy)

தேசிய சுற்றுச்சூழல் கொள்கை 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டுக்கென தனியான சுற்றுச்சூழல் கொள்கை (State Environment Policy) இதுவரை இல்லை. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டில் பெரும் ஆர்வம் உள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சிப்பாதை, மாநிலத்திலுள்ள மனித வளம் மற்றும் இயற்கை வளங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தனிப்பட்ட சுற்றுச்சூழல் கொள்கை ஒன்றினை உருவாக்குமாறு ஆணையிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டம்–2023ன் கீழ் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதிபடுத்தும் வண்ணம் வனப்பரப்பை அதிகரித்தல், நீர் நிலைகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலமாக தமிழகத்தின் சூழலியல் சமன்பாடு (ECOLOGICAL BALANCE) பராமரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த தொலைநோக்குத் திட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் வண்ணம் தமிழகத்தின் சுற்றுச்சூழல் கொள்கை வகுக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு நடப்பாண்டில் வெளியிடப்படும்.

## 3. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகப் பணிகள் கணினிமயமாதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கியமான பணி பல்வேறு சட்டங்களின் கீழ் தொழிற்சாலைகள் அமைப்பதற்கும், உற்பத்தியை தொடங்குவதற்கும் இசைவாணைகள் வழங்குவது ஆகும். ஆண்டுதோறும் சராசரியாக 1500–2000 இசைவாணைகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தற்போது தொழிற்சாலைகளிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று இசைவாணையினை கோப்புகள் மூலம் பரிசீலித்து வழங்குகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இம்முறையினை மாற்றி கணினி மூலம் கோப்புகள் துரிதமாக பரிசீலித்து இசைவாணையினை வழங்க வாரியம் முடிவு செய்துள்ளது. இதற்காக வாரியம் வரும் நிதியாண்டில் ரூ.50 இலட்சம் செலவில் இசைவாணை வழங்குதலுக்கான மென்பொருள் தயாரிக்கவும் மற்றும் கணினிகள் வாங்கவும் நடவடிக்கை எடுக்கும்.



## 4. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட பொறியாளர்களுக்கு கையடக்க கணினி (NOTE BOOK/TABLET COMPUTER) வழங்குதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட பொறியாளர்கள் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளை தொடர்ந்து கண்காணிப்பதற்கும், தகவல்களை உடனுக்குடன் பெறுவதற்கும் வாரியத் தலைமை அலுவலகத்தோடு கணினி மூலமாக தொடர்ந்து அறிவுரைகளைப் பெற்று சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முனைப்புடன் செயலாற்றுவதற்கும் ஏதுவாக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் வரும் நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அனைத்து மாவட்ட பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வையிடும் பொறியாளர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் இணையதள இணைப்புடன் கூடிய நோட்புக்/கையடக்க (Tablet) கணினிகள் வழங்கப்படும். இதனால் மாசின் அளவு வாரம் முழுவதும், 24 மணிநேரமும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் ஏற்படும்.

## 5 . வாரியத்தில் உள்ள பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் பணியிடங்கள் நிரப்பப்படும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் தற்பொழுது காலியாகவுள்ள 121 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 30 சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளுக்கான பணியிடங்கள் 2012–2013 ஆம் ஆண்டில் நிரப்பப்படும். இதன் காரணமாக தொழிற்சாலைகள் கண்காணிப்பு, புகார்கள் மீது துரித நடவடிக்கை, நீர் ஆதாரங்கள் பாதுகாப்பு போன்ற பணிகள் மேம்படும்.



## 6 . விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டையில் புதிய மாவட்ட அலுவலகம் கட்டுதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 31 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 14 மாவட்ட ஆய்வகங்களை கொண்டுள்ளது. இவற்றில் 9 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 8 மாவட்ட ஆய்வகங்கள் மட்டுமே சொந்த கட்டடங்களில் இயங்குகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வாரியம் வரும் நிதி ஆண்டில் தஞ்சாவூர், விழுப்புரம் மற்றும் புதுக்கோட்டையில் புதிய மாவட்ட அலுவலகங்களை ரூ 3.75 கோடி செலவில் கட்டும்.

## 7. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் காற்று தன்மை கண்காணிக்கும் திறனை அதிகரிக்க சென்னை மாநகரில் ஐந்து நேரடி தொடர் காற்று கண்காணிக்கும் நிலையங்கள் நிறுவுதல்

சென்னை மாநகரில் வாகனங்களின் எண்ணிக்கை நாள்தோறும் கூடி வருவதாலும், சென்னையின் பரப்பளவு தற்போது பெருமளவில் விரிவடைந்துள்ளதாலும், பல்வேறு கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாலும் சென்னையிலுள்ள 15 மண்டலங்களிலும் காற்று அதிகமாக மாசடைந்துள்ள பகுதிகளைக் கண்டறிவதற்கு போதிய கண்காணிப்பு நிலையங்கள் மிகவும் அவசியமாக தேவைப்படுகின்றன. காற்று மாசின் தன்மையைக் கண்காணிக்கும் பணி சிறப்பாக செயல்படுத்தப்பட்டால்தான் மாசைக் குறைக்கும் நடவடிக்கைகளை எடுக்க இயலும். தற்போது 5 இடங்களில் மட்டுமே மேம்படுத்தப்படாத கண்காணிக்கும் கருவிகள் உள்ளன. நடப்பாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி முதற்கட்டமாக 5 நேரடி தொடர் காற்று கண்காணிக்கும் நிலையங்களை ரூபாய் 6.25 கோடி செலவில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தன்னுடைய நிதியிலிருந்து அமைக்கும்.



## 8. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் காற்று தன்மை கண்காணிக்கும் திறனை அதிகப்படுத்த சென்னை மாநகரில் ஒரு நடமாடும் தொடர் காற்று கண்காணிக்கும் நிலையம் நிறுவுதல்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் சுற்றுப்புற காற்றின் தன்மையை கண்காணிக்கும் பொருட்டு விரிவாக்கப்பட்ட சென்னையின் மிகவும் மாசடைந்துள்ள பகுதிகள் கண்டறியப்பட்டு, அதனை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஒரு நடமாடும் (MOBILE) தொடர் காற்று கண்காணிக்கும் நிலையம் ரூபாய் 1.2 கோடி செலவில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிதியிலிருந்து அமைக்கப்படும். மேலும் இந்த நிலையம் விழிப்புணர்வு மற்றும் புகார்களை பதிவு செய்யும் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

## 9 . சுற்றுச்சூழல் மன்றங்களில் ஆய்வக உபகரணங்கள் வழங்குதல்

பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மன்றங்களில் மாணவர்கள் சுற்றுச்சூழலைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக மண் பரிசோதனை செய்தல், நீர் பரிசோதனை செய்தல், உயிரினக் கழிவுகள் மூலம் எரிவாயு தயாரித்தல் போன்ற பல்வேறு விவரங்களை தெளிவுபடுத்தும் வண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி முதற்கட்டமாக தலா ரூ.2000/– மதிப்புள்ள ஆய்வக உபகரணங்கள் (Laboratory Kits) ஏற்கனவே சுற்றுச்சூழல் மன்றங்கள் உள்ள 1000 பள்ளிகளில் ரூ.20 இலட்சம் செலவில் வழங்கப்படும்.



## 10 . மின்னணுக் கழிவுகளை மறுசுழற்சி செய்வதில் புதிய வழிகாட்டுதல்களை ஏற்படுத்துதல்

இந்திய தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு (Confederation of Indian Industry) அறிக்கை ஒன்றில் 1,46,000 டன் மின்னணு கழிவுகள் ஆண்டுதோறும் இந்தியாவில் உற்பத்தியாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்னணு கழிவுகளை (E-WASTES) அங்கீகாரம் இல்லாத சிறு நிறுவனங்கள் மறுசுழற்சி அடிப்படையில் எரிப்பதால் நச்சு புகை கட்டுப்பாடின்றி வெளியேறுகின்றது. மின்னணு பொருட்களின் அதிகவேக பயன்பாட்டினால் வருங்காலங்களில் மின்னணுக் கழிவுகள் சுற்றுச்சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மின்னணுக் கழிவுகளை வெளியேற்றுவதற்கான செயல்முறைகள், அபாயகரமான கழிவுகள் மற்றும் அனைத்து கழிவுகளையும் கையாளும் முறைகளையும் சேர்த்து புதிய வழிகாட்டுதல்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையினை

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொள்ளும். இதன் மூலம் மின்னணுக் கழிவுகள் மேலாண்மையில் தமிழகம் நாட்டிலேயே முன்னோடியாக திகழும்.

**பி.வி.ரமணா**
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்